# ஆத்மஜோதி



தூய அன்னை ஸ்ரீ ஆனந்தமாயி

பங்குனி — சித்திரை 1976

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆத்மஜோதி

ஓர் ஆத்மீக மாதவெளியீடு



எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.
— சுத்தானந்தர்

ஜோதி 28—இராக்ஷத-நள ஸ்ரீ பங்குனி-சித்திரை (13-4-76) உ—சுடர் 5-6

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| ஸ்ரீ புவனேஸ்வரிமாலை | — | 81 |
| ஆனந்தமாயி | — | 83 |
| அர்ச்சனைமாலை | — | 88 |
| அன்னை ஸ்ரீ ஆனந்தமாயி | — | 92 |
| வாழ வழிவகுத்த அருணகிரி வள்ளல் | — | 99 |
| ஸ்ரீலஸ்ரீ சிவானந்த மௌன சுவாமிகள் | — | 103 |
| ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அருளியவை | — | 108 |



### ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள்சந்தா 100—00
வருடச்சந்தா 6—00
தனிப்பிரதி 1—00

கௌரவ ஆசிரியர்: திரு. க. இராமச்சந்திரா
பதிப்பாசிரியர்: திரு. நா. முத்தையா

## ஆத்மஜோதி நிலையம்

நாவலப்பிட்டி. [போன்: 353]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஸ்ரீ துர்க்கைச் சித்தர்

— அருளிய —

# ஸ்ரீ புவனேஸ்வரிமாலை

*(பண்: ஹம்ஸத்துவனி;*
*அல்லது கம்பீர நாட்டை)*

மந்திர ஒலியே மங்கள இசையே
மன்மத பாணியளே!
சந்திர சேகரி சண்முகன் தாயே
சங்கரி சௌந்தரியே!
இந்திர ஜாலம் தந்திர மாயம்
இலங்கிடு விழியவளே!
பொங்கிட என்றும் புன்னகை பூத்த
புவனேஸ்வரி தாயே!

பந்தனை விரலி பர்வத தேவி
பவபய ஹாரிணியே!
சுந்தர ஈசன் சுருதியும் நீயே
சுகசுக ரூபிணியே!
சிந்தனை யாவும் உன்னிடம் வைத்தேன்
சித்தியின் ஒருவடிவே!
எந்தனைக் காக்க எழில்நகை பூத்த
புவனேஸ்வரி தாயே!

சத்திய வடிவே சத்குண உருவே
சதுர்மறை சன்னிதியே!
நித்திய நிதியே நிறைபுகழ் ஒளியே
நினைத்திட வருபவளே!
வைத்திய மணியே வறுமைகள் போக்க
வையகம் வாழ்பவளே!
புத்தியுள் சேர்ந்து புன்னகை பூத்த
புவனேஸ்வரி தாயே!

வழிபடு வோர்க்கு வரந்தரு தாயே
வந்தருள் வேணியளே!
பழிபடு துயரம் பதைதரு தீமைப்
பகைகளைப் புதைத்தவளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிகளின் அருளால் வினைகளை விரட்ட
விளக்கொளி யானவளே!
பொழிந்திடு அருளாய்ப் புன்னகை பூத்த
புவனேஸ்வரி தாயே!

அறுபத்து நான்கு கலைகளு மானாய்
அன்னையும் நீயானாய்!
கறுவிடு அரக்கர் கண்பகை கடிந்த
கனிமொழி நீயானாய்!
குறுகலர் தம்மைக் குறுந்தடி பாய்ச்சும்
குணமணி நீயானாய்
மறுவுகள் போக்க மங்கலம் பூத்த
புவனேஸ்வரி தாயே!

வல்லவள் நீதான் வஞ்சியும் நீதான்
வசந்தமும் நீயேதான்!
நல்லவள் நீதான் நன்னிதி நீதான்
நற்கலை நீயேதான்!
சொல்லவள் நீதான் சொர்ணமும் நீதான்
சொர்க்கமும் நீயேதான்!
நல்வையம் காக்க நலநகை பூத்த
புவனேஸ்வரி தாயே!

நாற்பத்தி மூன்று கோணத்தின் நடுவில்
நான்மறை நீநவின்றாய்!
நோற்றிடும் நோன்பின் பலனென வந்தாய்
நோய்களை நீதீர்த்தாய்!
கார்மழை யானாய் காவலும் ஆனாய்
காத்திடநீ வந்தாய்!
சீர்வையம் காக்க சிவனில் பூத்த
புவனேஸ்வரி தாயே!

ஜெயஜெய புவன ஈஸ்வரி தாயே
ஜெயஜெய ஸ்ரீங்காரி
ஜெயஜெய மாயா மங்கள ரூபி
ஜெயஜெய ஸ்ரீங்காரி
ஜெயஜெய துர்க்கா சண்டிகை காளி
ஜெயஜெய க்லீம்காரி
நயனங்கள் தன்னில் நன்னகை பூத்த
புவனேஸ்வரி தாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தமாயி

(ஆசிரியர்)

மாயி என்ற சொல்லுக்குத் தாய் என்பது பொருள். வடநாட்டில் கங்கையை கங்காமாயி என்று அழைப்பர். எந்த ஒரு கருமத்தைத் தொடங்கும் போதும் முடிவுறும் போதும் கங்காமாயிக்கு ஜே! என்ற கோஷம் எழும்புவதை இன்றும் நாம் பார்க்கலாம். ஆனந்த மாயி என்ருல் ஆனந்தத் தாய் என்பது பொருள். தான் ஆனந்தத்தை அநுபவிக்கும் ஒருவர்தான் மற்றையோருக்கும் ஆனந்தத்தை ஊட்ட முடியும். நித்தியம் அழுது வடிந்துகொண்டிருப்பவன் மற்றையோர் உள்ளத்தில் ஆனந்தத்தின் சாயலைத்தானும் எழுப்ப முடியாது. ஆனந்தம் அநுபவிக்கலாமே தவிர வாய்விட்டுச் சொல்ல முடியாது. வாய்விட்டுச் சொன்னுலும் அனுபவிப்பது முழுவதையும் வார்த்தைகளால் விளக்க முடியாது.

அன்னையார் அவர்கள் ஆனந்தத்தின் சொரூபமாக விளங்குபவர்கள். பக்தியின் உயர்ந்த நிலையான பிரேமைக்கு உருவம் கொடுத்தால் அது அன்னையாரின் உருவம் என்றே கூறலாம். உள்ளத்தில் பிரேமை பொங்கி எழும்போது மனித உருவத்தையே மாற்றி விடுகிறது. அன்னையாரின் திருமுகத்தில் எப்பொழுதும் பிரேமையின் வெளிப்பாட்டையும் ஆனந்தத்தின் சாயலையுமே காண முடியும். இத்தகைய அன்னையார் ஆனந்தமாயி அம்மையாரின் திருஉருவமே இம்மாதச் சுடரை அணிசெய்கின்றது. இத்திருஉருவைப் பார்த்துக்கொண்டிருக்கும்போதே நம் உள்ளத்திலும் நம்மையும் அறியாத ஓர் ஆனந்தத்தின் நிழல் படிவதை உணர்கின்ருேம்.

அன்னையாருக்கு மூன்று வயது நடைபெறும்போது அடுத்த வீட்டில் ஒரு பஜனை நடந்தது. அப்பஜனையின் ஒலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதில் விழுந்ததும் குழந்தை மயங்கி விழுந்து விட்டது. வீட்டில் உள்ளவர்கள் வலிப்போ அன்றி வேறு எவ்வித நோயோ என்று மயங்கினர். டாக்டரிடம் கொண்டு சென்று காட்டினர். அந்த டாக்டர் உடற் கூற்றிலும் உள்ளத்தை ஆராய்வதிலும் ஆத்மீக அனுபவத்திலும் மிக்கவர். குழந்தையை நன்கு பரிசோதித்துவிட்டு குழந்தைக்கு இந்நிலை ஏற்படும் பொழுது பக்கத்திலாவது சூழலிலாவது ஏதாவது விசேடங்கள் நிகழ்ந்தனவா என்று கேட்டார். அயல் வீட்டில் விசேட பஜனை ஒன்று நடந்தது என்று பெற்றோர் கூறினர். 'டாக்டர் குழந்தைக்கு ஒன்றுமில்லை. உடல் நிலைபற்றி எதுவும் பயப்பட வேண்டியதில்லை' என்று கூறியதோடு அவள் உங்கள் குழந்தை அல்ல, தெய்வக் குழந்தை என்று கூறினார். டாக்டர் சொன்ன விடயத்தைப் புரிந்து கொள்ள அவரைப்போலல்லவா அனுபவப்படவேண்டும்.

பன்னிரண்டு வயதில் திருமணம் நிகழ்ந்தது. எப்படியும் தமது குழந்தைக்குத் திருமணம் நிகழ்ந்துவிட வேண்டும் என்பதைத்தான் எந்தப் பெற்றாரும் விரும்புவது இயல்பு. நாயகனாக வந்தவர் மணப்பெண்ணின் தோளில் தீண்டினார். பாம்பை ஒருவன் தீண்டினால் எப்படி உடல் எல்லாம் பதறுமோ அப்படி நடுக்கம் கொண்டார். என்ன பிதாஜீ இப்படி நடுங்குகிறீர்களே என்று அன்னையார் கேட்டார். அன்று தொடக்கம் அன்னையார் தமது கணவரைப் பிதாஜீ என்றே அழைத்தார். அவரும் மகளாகவே முதலில் கருதினார். ஆனால் காலகதியில் அன்னையாரே அவரின் குருவாகவும் விளங்கினார்.

இராமகிருஷ்ணபரமகம்சதேவரும் அன்னை சாரதா தேவியாரும், உலகிற்கு எப்படி வாழ்ந்து காட்டினரோ அத்தகையதொரு வாழ்க்கையைத்தான் அன்னையும் பிதாஜீயும் வாழ்ந்து காட்டினர். 'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்' என்பதற்கு இவர்கள் வாழ்வு ஒரு எடுத்துக் காட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையார் அவர்கள் பகவான் ரமணமகரிஷி அவர்களுடைய ஆச்சிரமத்திற்கு வந்த காலத்தில் அன்னையாரைத் தரிசிக்கும் பாக்கியம் அடியேனுக்கும் கிடைத்தது. அன்றைய தினம் அவர்களுடைய திருமுகத்தைப் பார்த்த போது உள்ளத்தில் ஏற்பட்ட பதிவு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்றும் பசுமையாகவே இருக்கிறது. அன்னையார் அவர்கள் அன்று இருந்த பிரேமை நிலையைப் பார்த்து அனுபவம் பெறுதவர்கள் யாருமே இல்லை என்றே கூறலாம்.

அன்னையாரை நினைக்கும்போதெல்லாம் சைதன்ய மகாபிரபுவின் திருமுகத்தோற்றமே நினைவுக்கு ஓடிவரும். பக்தி, பிரேமை இரண்டினதும் உருவமாக விளங்கியவர் சைதன்யர். அதனையே அன்னையாரிடத்திலும் பார்க்க முடிகிறது.

அன்னையாரின் உத்தம சீடர்கள் மூவர் பரிவ்ராஜக யாத்திரை செய்ய விரும்பினர். அன்னையார், அவர்களை அழைத்து நீங்கள் மூவரும் ஸ்ரீரமணாச்சிரமம் சென்று அங்கே 40 நாட்கள் தங்கிவாருங்கள் என்று கட்டளை இட்டார். ஆச்சிரமத்தில் மூன்று வேளை உணவுக்குமேல் நீங்கள் உண்ணக் கூடாது என்ற கட்டளையும் பிறப்பித்து மற்றைய நாட்களில் பிச்சை எடுத்தே உண்ண வேண்டும் என்றும் கூறி இருந்தார்.

பகவான் ஆச்சிரமத்தில் பூத உடலோடு விளங்கிய காலத்தில் அங்கு அதிகாலையிலும் மாலையிலும் நடைபெறும் தியானம் சாதகர்களுக்கு ஒரு அரிய விருந்தாகும். அந்தத் தியான அநுபவங்களை இப்போ நினைத்தாலும் மறுபடியும் வாழ்வில் இப்படிச் சந்தர்ப்பங்கள் இனிமேல் கிடைக்காதா என்று பக்தர்கள் ஏங்குவதுண்டு.

மூன்று சீடர்களும் மூன்று நாட்கள் மத்தியான உணவு மாத்திரமே ஆச்சிரமத்தில் உண்டனர். அடுத்த நாள் காலைத்தியானம் முடிந்ததும் நகரத்திற்குச் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிச்சை எடுத்து உண்டு மாலைத் தியான நேரத்திற்கு வந்தனர். இதனை கண்ணுற்ற பக்தர் ஒருவர் பகல் எங்கே சென்றிருந்தீர்கள் எனக் கேட்டார். அவர்கள் தம்து நியமத்தை வெளிப்படுத்தினர். பக்தர் 5 ரூபாவைக் கொடுத்து இதனை ஏற்றுக்கொள்ளுங்கள் எனக் கூறினர். தமது நியமத்துக்கு மாறுனதென மறுத்தனர். இதனையும் பிச்சையாகவே ஏற்றுக்கொள்ளுங்கள் என பக்தர் கூறியதன்மேல் அதனை ஏற்றுக்கொண்டனர். என்றாலும் அவர்களுடைய உள்ளம் பரிபூரணமாகச் சமாதானம் அடையவில்லைப்போலும். அதற்குப் பதிலாகப் பக்தருக்கு ஏதாவது செய்யவேண்டும் என்று அவர்கள் உள்ளம் விரும்பியது போலும். அன்னையாரின் உபதேசமணிகள் அடங்கிய ஆங்கில வெளியீடு ஒன்றை, அதுவும் வேருெரு பிரதி பெற்றுக்கொள்ளமுடியாத நிலையில், பக்தருக்கு அளித்தனர்.

இதுதான் உண்மையான சாதகர்களின் வரலாறு. தமக்குச் சாதனைப் படுத்தாத நெறிகளை நூலை வாசித்துவிட்டு மாத்திரம் பிரச்சாரம் செய்வதாலேயே இன்று இந்து சமயம் க்ஷீணதசை அடைந்துள்ளது என்று சொன்னல் அதுமிகையாகாது. பலகுருமார்கள் பல சமயங்களிலும் பல்கிப் பெருகி உள்ளார்கள். உண்மையான சாதகன் ஒருவனைக் காண்பதுதான் அரிதாக இருக்கிறது.

அன்னையார் பிதாஜீ உட்பட பதினறு பேர் யாத்திரை ஒன்று சென்றிருந்தனர். யாத்திரையின் போது பிதாஜீக்கு பெரியம்மை கண்டுவிட்டது. பிதாஜீயின் முடிவு காலம் நெருங்கி விட்டது என்பதை அம்மையார் உணர்ந்தார். மற்றைய பதினன்கு பேரையும் பார்த்து நீங்கள் பதினன்குபேரும் உடனே புறப்பட்டுச் செல்லுங்கள் என்று கட்டளையிட்டார். அவர்கள் தயங்கினர். இந்த இக்கட்டான நிலையில் அன்னையாரைத் தனியாக விட்டுச் செல்லவிரும்பவில்லை. அன்னையாரின் தாயுள்ளம் மற்றவர்களைச் சிரமப்படுத்த இடம் கொடுக்கவில்லை. அன்னையாரின் பரிவானவார்த்தைகளுக்கு அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் இணங்கவில்லை. அன்னையார் கண்டிப்பான குரலில் நீங்கள் இங்கிருக்க வேண்டும் நான் செல்ல வேண்டும். அல்லது நான் இங்கிருக்க வேண்டும் நீங்கள் செல்ல வேண்டும். இதில் எது என்பதை உடனே முடிவு செய்யுங்கள் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். வாழ்க்கையில் ஒரே ஒருமுறை கோபம் வந்ததைப் பக்தர்கள் கண்ணுரக் கண்ட நிகழ்ச்சி இது ஒன்றுகும். அன்னையாரின் அன்புக் கட்டளையை மறுக்க அஞ்சி பதினுன்குபேரும் சென்றுவிட்டனர். அன்னையார் பிதாஜீயை தனியாகவே அறை ஒன்றில் வைத்துப் பராமரித்து வந்தார். அன்னையின் பராமரிப்பில் பிதாஜி புதியதோர் உலகில் வாழ்ந்தார். கூண்டைவிட்டுக் கிளி புறப்படப் போவதை அன்னையார் உணர்ந்தார். தமது கையினுல் பிதாஜிக்கு தலையிலிருந்து கால்வரை ஸ்பரிசித்து ஹஸ்த தீட்சை கொடுத்தருளினுர். உயிர்க்கிளி உடற்கூண்டை விட்டுச் சென்றுவிட்டது. அன்னையார் தமது கடமையைச்செய்து ஒரு பொறுப்பினின்று விலகிக் கொண்டார்.

பகவான் ரமணமகரிஷி அவர்களை ஒருமுறையேனும் தரிசித்தவர்களுக்கு அவரது நயனதீட்சையின் அனுபவம் கிடைக்காமலிருந்திருக்க முடியாது. அதே போன்று அன்னையின் திருமுகத்தை ஒருமுறையாவது கண்டவர்களுக்கு அவரது பிரேமையின் காந்தி உள்ளத்தில் பாயாமல் இருந்திருக்க முடியாது. படத்தை மாத்திரம் பார்த்தவர்களே பரவசத்திற்கு ஆட்பட்டார்கள் என்றுல் அவர் பெருமையை எங்ஙனம் உரைப்பது?

இதைத் தொடர்ந்து அன்னையாரின் அர்ச்சனை மாலை இடம் பெறுகின்றது. ஆயிரம் பிறை கண்ட அன்னையாரின் அர்ச்சனை மாலையை ஆயிரம் பிறைகண்ட அன்பர் க. இராமச்சந்திரனுர் இயற்றியதும் மிகப் பொருத்தமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூய அன்னை ஸ்ரீ ஆனந்தமாயி
## அர்ச்சனை மாலை

அன்பு மலரால் அன்னையைத் தொழுவோம்
இன்ப மெல்லாம் எளிதாய் வருமே
சீதை சாவித்திரி நளாயினி முதலாம்
மாதரசி களால் மகிமை பொருந்திய
பாரத நாட்டின் பாரமார்த் திகத்தை
சாரத தேவி சாதித்தநன் முறையில்
பாரக மெங்கும் பரவிடச் செய்ய
அதேவங்க நாட்டில் ரிப்பெருச் ஜில்லாவில்
துர்முகி ஆண்டு தூய சித்திரையில்
நிர்மலா தேவி யெனும்பெயர் தாங்கி
வந்தவ தரித்த சுந்தரி போற்றி!
'வளரும் பயிரை முளையில் தெரியும்' எனும்
ஆன்ருேர் வாக்குக்கோர் உதாரண மாக
சான்ருேர் நேயத்தில் வளர்ந்தனை போற்றி!
மூன்ரும் வயதில் முகுந்தன் நாமபஜனை
கேட்டதும் பவசமாதி அடைந்தனை போற்றி!
அதைக் கண்டஞ்சிய அன்னைபிதா வைத்தியர்
காக்கை வலியென்று ஏக்கமுடன் வைத்தியம்
ஆரம்பிக்கும் வேளையில் ஆன்மீக வாழ்வில்
அநுபவம் வாய்ந்த அறிஞரைக் கொண்டு
உண்மைநிலை உறவினர்க் குணர்த்தினை போற்றி!
இல்லற வாழ்வில் இறங்கிய அன்றே
சொந்த நாயகனையே தந்தையாய் மாற்றி
அந்தநல் மனிதனைநின் அருஞ்சீட ஞக்கி
உந்தனின் ஆன்மீகப் பணிக்கோர் உதவியாய்ப்
புண்ணியந் தேடப் புரிந்தனை போற்றி!
உன்னையே கதியென் றுறுதி பூண்ட
உத்தம சீடனும் ஜோதிர்ருய் சூட்டிய
ஆனந்த மாயெனும் அற்புத நாமத்தை
அன்புடன் ஏற்று ஆசி கூறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னுல கேத்த இசைந்தனே போற்றி!
அன்னார் அடிக்கடி ஆர்வமொடு கோரிய
சந்நியாச மந்திரம் கையிலே யாத்திரையில்
மானச சரோவரத் தீர்த்த மாடியபின்
மாந்தர்தா தவஞ்செய்த மலையடி அதனில்
கருணையோ டருளிக் காத்து ரக்ஷித்து
நீண்டயாத் திரைமுடித் தல்மோரு சேர்ந்ததும்
மீண்டிங்கு வந்து வினைப்பிறவி சாரா
அரும்பதமும் அன்னார்க் களித்தனே போற்றி!
கன்னியரை யெலாந்தூய அன்னையாய்க் காணும்
காட்சியை எமக்குக் கடந்த நூற்றூண்டில்
பரமஹம்ஸ தேவர் பார்க்க அருளியதுபோல்
வாலிபராயினும் வயோதிபராயினும் ஆடவ ரெவரையும்
பிதாவாய்ப் பேணும் பேற்றைப் பெண்குலம்
சதா நினைவில் வைக்குமாறு உணர்த்துவாய் போற்றி!
ஆதி அருணசலம் ரமணமுனி வருகையால்
மேதினி போற்றுபழம் மேன்மை பெற்றதுபோல்
பன்னெடுங் காலம் முத்தி ஸ்தலமென
மன்னுல கேத்திய மாசில் காசியில்
ஆச்சிரமம் நிறுவி ஆங்கு வீற்றிருந்து
அந்நிய மதத்தினர் ஆயிரக் கணக்காய்
வந்து வழிபட வகுத்தனே போற்றி!
பகவான் ரமணரின் சமாதிக் கோயில்முன்
மண்டபம் அமைக்கத் திட்ட மிட்டதும்
ஆர்வத் துடனே ஆங்கெழுந் தருளி
அத்திருப் பணிக்கு அடிக்கல் நாட்டி
அவருடன் இணைந்த அத்யாத்ம உறவின்
அற்புதச் சிறப்பை விளக்கினே போற்றி!
'காச்யாந்த மரணந்முத்தி, ஸ்மரணத் தருணச்சலே'
எனும் மணிவாக்கின் மகிமையை இருவரும்
இன்றைய உலகுக் கருளிய அற்புதம்
உன்னுந்தோறும் உளம் உருகுது அம்மையே!
மிகவும் பழைய புனித பூமியென
நம்மதத் தினர்போற்றிய நைமிசா ரணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே இருந்தது எப்படி மறைந்ததென
ஏங்கிய இந்துக்கள் இறும்பூ றெய்த
சார்வரி ஆண்டில்நின் சகசாத்ம சித்தியால்
பார்புகழ் அப்பதியின் பழைய அத்திவாரத்தை
கண்டு பிடித்துப் பத்தாண்டு எல்லைக்குள்
ஆச்சிரமத் தோடுபல ஆலயங் களும்,
பதினென் புராணப்பழைய சுவடிகள் சேர்த்து
அவற்றை வைத்துப் பூசிக்க வாசிகசாலையும்,
புராண புருடனுக் கோர்சிலையுங் கோயிலும்
புராண படனம் ஒழுங்காய் நடைபெற
மண்டபம் ஒன்றும் எழுப்பினை போற்றி!
இக்கலியுகத்தில் இதுபோன்ற அறப் பணி
வேறெவராவது செய்ததை அறியோம் அம்மா!
தன்பெருமை அறியாத் தனிப் பெருமாட்டி
உன்பெருமை அடியேற் குரைத்தற் கரிதாம்
"அகிலாண்ட கோடியீன்ற அன்னையே பின்னையுங்
கன்னியென மறைபேசும் ஆனந்த ரூபமயிலே"
என்று திருமூலன் குருமரபில் தோன்றிய
தாயுமானவர் அருளிய தனிப்பெரும்வர்ணனை
முற்றிலும் உனக்கே பொருந்தும் அம்மா!
அனைத் துலகிற்கும் ஆதியே போற்றி!
ஆருயிர்க் கோருயிர் ஆனாய் போற்றி!
இகபர சுகங்களை ஈவாய் போற்றி!
எல்லாம் வல்ல வல்லபி போற்றி!
ஏழைமை தவிர்க்கும் இலக்குமி போற்றி!
ஓங்கா ரத்தின் உட்பொருள் போற்றி!
காத்யா யனியே கல்யாணி போற்றி!
காமாட்சி போற்றி! விசாலாட்சி போற்றி!
கௌரியே போற்றி! கன்னியே போற்றி!
சங்கரி போற்றி! சாம்பவி போற்றி!
சீலந்தரு சிவ காமியே போற்றி!
திரிபுர சுந்தரி தீக்ஷிதா போற்றி!
நாத ரூபிணி நடேஸ்வரி போற்றி!
பார்வதி போற்றி! பகவதி போற்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைரவி போற்றி! பவானி போற்றி!
பொறையே போற்றி! போதமே போற்றி!
மஹா சரஸ்வதி மனோன்மணி போற்றி!
உன்னருள் ஓங்கி உயிர்க்குலம் வாழ்க!
நன்மை ஓங்குக! நாடெலாம் வாழ்க!
இன்ப வளங்கள் எங்கும் நிறைக!
புதுயுகம் வருக பூரணம் பொலிக!
ஆன்ம நேயம் அவனியிற் பரவுக!
அமரவாழ் வருள்வாய் அன்னையே போற்றி!
நிர்மல சுந்தரி தேவியே போற்றி!
ஆனந்த மாயி அம்மையே போற்றி!
போற்றி! போற்றிநின் பூங்கழல் போற்றி!
போற்றி! போற்றிநின் பொன்னருள் போற்றி!
நிந்தையே சாரா நெடும்புகழ் வாய்ந்த
நிர்மலா தேவியே சரணம்! சரணம்!
சரணம்! சரணம்! சற்குரு தேவி!
சக்தி ஓம் சக்தி சுத்த சக்தி ஓம்
சக்தி ஓம் சக்தி சுத்த சக்தி ஓம்!

---

# சதாபிஷேக விழா

உலகம் போற்றும் பரதேவியான ஸ்ரீ ல ஸ்ரீ ஆனந்தமாயி அம்மையாரின் சதாபிஷேக விழாவை அதாவது 80ஆவது ஆண்டு நிறைவு விழாவை கொழும்பில் மிக விசேடமான புதிய புனிதமான முறையில் 9-5-76 ஞாயிற்றுக்கிழமை கொண்டாட ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. விழா ஆரம்பத்தில் 108 கன்னியர்கள் ஆரத்தி எடுப்பார்கள்.

---

## வெளிநாட்டு அன்பர்களுக்கு:

1-1-76 தொடக்கம் இலங்கை தவிர்ந்த மற்றைய நாடுகளுக்கு அனுப்பப்படும் ஆத்மஜோதியின் தபால் கட்டணம் 60 சதமாக உயர்த்தப்பட்டிருப்பதால் வெளிநாட்டு அன்பர்கள் சோதியின் வருடச் சந்தாவாக 10 ரூபா அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை ஸ்ரீ ஆனந்தமாயி

(ஸ்ரீ ஜோதிஸ் சந்திர றேய்)

**முக்கியமான முடிவெடுக்க வேண்டிய கட்டத்தில் அவர் அவதரித்துள்ளார்.**

அன்னையின் உண்மைச் சொரூபத்தைப் புரிந்துகொள்வது எமது சாதாரண அறிவுக்கு அப்பாற்பட்டது. "உங்கள் கிறுக்குப் பிடித்த சிறு புதல்வியே நான்'' என்று அவர் எப்போதும் கூறிவருகிறூர். ஆனல் அவரது வாழ்க்கை முறையிலும் எம்மிடையே அவர் நிகழ்த்தும் ஆனந்தலீலைகளிலும் தெய்வீக சக்திகள் அனைத்தும் திட்பமான வடிவில் வெளிப்படுவதைக் காண்கிறேம்.

பல்வேறு வகைப்பட்ட மக்களின் ஆயிரக்கணக்கான கோரிக்கைகளுக்குச் செவி சாய்த்துக்கொண்டும் பலவகையான ஒலிகளால் இரவும் பகலும் சூழப்பட்டவாறும் இருந்தபோதிலும், அன்னையிடம் வற்ருத இனிய ஆனந்த ஊற்று எக்காலமும் பெருக்கெடுத்துப் பாய்வதைக் காணலாம். அவரது அமைதியான களங்கமற்ற பார்வையும், கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அவர் எப்போதும் கனிந்து புன்சிரிப்புடன் மறுமொழி கூறும் முறையும் அவரது நயமிக்க நகைச் சுவையும் சகல உயிர்களுக்கும் திருப்தியையும் மகிழ்ச்சியையும் அளிக்கின்றன. அவரது வாழ்க்கைமுறையானது அனைத்தையும் உள்ளடக்கியதாக இருப்பதால் அன்னை பராசக்தியின் அன்பே உருவெடுத்து வந்தவராக அவரை நாம் கருதலாம்.

அவர் மானிட உருவில் வந்துள்ள ஆதிபராசக்தியே என்று சிலர் கூறுகின்றனர். யாதொரு முயற்சியும் செய்யாமல் இயல்பான அகவளர்ச்சியின் மூலம் அவர் பூரணத்துவத்தை அடைந்துள்ளதாக வேறு சிலர் கொள்கின்றனர். யார் எங்ஙனம் கொள்கின்றனரோ அங்ஙனமே அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு அவர் தோன்றுவதாக யாம் கருதுகிறோம். ஆன்மீகக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள்கூட அவரை முதன்முறை பார்க்கும்போதே அவர்களிடம் ஒரு தெய்வீக எழுச்சி ஏற்படுகிறது. அவரது சன்னிதியில் வறண்ட இதயத்திலுங்கூட இறைவனையும் அவரது மகிமைகளையும் பற்றிய எண்ணங்கள் ஊற்றெடுக்கின்றன. எங்கும் நிறைந்த உயிர்ச்சக்தி அவர்களது உள்ளத்திலே ஓர் ஆனந்த சாகரமாக அலைமோதுகிறது.

அவரது குருயார், யாரிடமிருந்து அவர் தீட்சை பெற்றார் என்று ஒருமுறை அன்னையிடம் கேட்டபோது அவர் கூறினார்: ''இளமையில் என் பெற்றோரும் இல்வாழ்க்கையில் என் கணவரும் எனக்கு வழிகாட்டிகளாயிருந்தனர். இப்போது வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் உலகிலுள்ள சகல உயிர்களும் பொருள்களும் எனது குருவாக விளங்குகின்றன. ஆனால் ஒன்று நிச்சயம்: அனைவருக்கும் வழிகாட்டியாயிருப்பது பரம்பொருளொன்றே''

லௌகிக நோக்கில் அன்னை ஒரு லட்சியப் புதல்வியாயும் மனைவியாயும் தாயாயும் திகழ்கிறார். ஆன்மீக சாதகர்களுக்கு அன்னையின் பேச்சுக்களும் செயல்களும் ஆழ்ந்த கருத்துடையனவாய் விளங்குகின்றன. அவை பலவேறு ஆன்மீகப் பண்பாடுகளையும் யோக சாதனைகளையும் குறிப்பனவாய் இருப்பதோடு, துவைதம் அத்துவைதம் விசிஷ்டாத்துவைதம் போன்ற தத்துவக் கொள்கைகளின் அடிப்படை உண்மைகளை உணர்த்துவனவாயும் உள்ளன. அவரது உடலில் ஏற்பட்ட மாற்றங்கள் அவர் ஒரு தீவிர வைணவி என்பதைக் காட்டுகின்றன. ஆயினும் சிவன், காளி, துர்க்கை போன்ற தேவதைகளின் தாந்திரிக வழிபாட்டிலும் அவர் சிறந்து விளங்குகிறார். இதற்காக, கீழைத் தேசங்களிலும் மேலை நாடுகளிலும் உள்ள புகழ்பெற்ற தத்துவ ஞானிகள் அவரைப் பாராட்டியுள்ளனர். பக்தியோகம், ஞானயோகம் அல்லது கரும

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகத்தின் மூலம் தம் விசேஷத்துறையில் பூரணத்துவம் அடைந்துள்ள பிறமகான்களுக்கும் அன்னைக்கும் உள்ள ஒரே வேறுபாடு, அன்னையிடம் சாதனு மார்க்கங்கள் அனைத்தும் ஆச்சரியப்படத்தக்க முறையில் இணைந்து விளங்குவதேயாகும். பரம்பொருளை அடைவதற்கான பல்வேறு மார்க்கங்களின் இந்த ஒத்திசையின் காரணமாகவே எல்லாவகையான மக்களும் அன்னையிடமிருந்து ஆன்மீக எழுச்சி பெறுகின்றனர்.

அவரதுமகிழ்ச்சிதரும் இனியதோற்றமும் அசாதாரணமான பொறுமை சகிப்புத்தன்மை தியாக உணர்ச்சி எளிமை ஆகியனவும், ஆண் பெண் குழந்தைகள் யாவரிடமும் அவர் எப்போதும் மகிழ்ச்சியுடனும் நகைச்சுவையுடனும் பழகும் பான்மையும், அவரது மாசற்ற தெளிந்த காட்சியும், சகல உயிர்களிடத்தும் அவருக்குள்ள நல்லெண்ணமும், சாதி இன வேறுபாடின்றி அனைவரிடமும் அவர் காட்டும் அன்பும், இன்பதுன்பங்கள் போன்ற இருமையிலிருந்து அவர் பூரணமாக விடுபட்டுள்ள தன்மையும் காரணமாக அவர் தற்காலத்தில் தன்னிகரற்றவராக விளங்குகிறார். அவரது பூரணத்துவம் சுயமுயற்சி மூலம் ஏற்பட்டதாகக் கூறமுடியாது. ஏனெனில், குழந்தைப் பருவத்திலிருந்து அவரைக் கவனித்து வந்தவர்கள் அவரது வாழ்க்கை முழுவதும் எண்ணத்திலும் செயலிலும் அவர் ஒரேபோல இருந்துள்ளதாக உறுதியாகக் கூறுகின்றனர். அவர் எந்தவிதமான ஆன்மீக அல்லது சமயப்பயிற்சியையும் மேற்கொண்டதையாரும் இதுவரைகண்டதில்லை.

அவரது உடலிலே தோன்றிய இயற்கையான அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட பண்புகள் யாவும் உலக நன்மைக்காகத் தாமாகவே ஏற்பட்டவை. இவை அவரது இச்சைப்படியோ இச்சைக்கு எதிராகவோ ஏற்பட்டவையல்ல; அன்றி, அவர் செய்த எந்த ஆன்மீக சாதனையின் பலனுகவேனும் ஏற்பட்டவையுமல்ல.

நெய்யும் பிற ஆகுதிப் பொருட்களும் யாகாக்கினியில் இடப்படும்போது, இயற்கை விதிப்படியே அக்கினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுந்துவிட்டு எரிகிறது. ஆனால் அதனின்று எழும் நறுமணம் முழுச் சூழலையும் தூய்மைப்படுத்தி எழுச்சியூட்டிவிடுகின்றது. சிறிது நேரத்துக்குப் பின் யாக ஆகுதிகளின் அடையாளம் எதுவும் அங்கு காணப்படுவதில்லை. ஆனால் அக்கினியோ தூய்மையுடனும் பிரகாசத்துடனும் தொடர்ந்து எரிகிறது. அன்னையின் பக்தர்கள் முழு அன்புடனும் மரியாதையுடனும் தங்கள் காணிக்கைகளை அன்னையின் திருப்பாதங்களில் சமர்ப்பிக்கும் போதும் இவ்வாறே நிகழ்கின்றது. தன் குழந்தையின் வாய்பட்டுத் தாய்க்குப் பால் சுரப்பதேபோல, இவ்வன்புக் காணிக்கைகளில் அன்னையின் கரம்பட்ட மாத்திரத்தில் அவரது இதயஊற்று பொங்கிப் பெருகுகிறது. அவரது சொல், பார்வை, வதனம் யாவற்றிலும் தம் குழந்தைகளிடம் அவருக்குள்ள பேரன்பு வெளிப்படுகிறது. சிறிது நேரத்துக்கு அவரது வதனம் ஒரு தெய்வீக ஒளியுடன் பிரகாசித்துவிட்டுப் பின் அதன் இயல்பான சாந்த நிலையைத் திரும்பப் பெறுகிறது.

அவரிடம் மனப்போராட்டம் முரண்பாடு எதுவும் கிடையாது. செயலுக்கு அல்லது செயலின்மைக்கான தூண்டுதல் எதுவும் அவரது அமைதியைக் குலைப்பதில்லை. சகலவிதமான சமயக் கொள்கைகளுக்கும் அனுஷ்டானங்களுக்கும், உலகின் ஒழுக்க விதிகளுக்கும் அடிப்படையாக விளங்குவதும், அகிலத்தின் நன்மைக்காகப் பல்வேறு காலப்பகுதிகளில் மகான்களின் உள்ளங்களில் காண்பித்தருளப்படுவதுமான மாபெரும் சத்தியத்தின் பேரொளியில் அவர் முற்றாக மூழ்கித் திளைத்திருக்கிறார். அச்சத்தியத்தின் கணநேரத் தோற்றம், அதன் ஒரு குறிப்பு அவரது எல்லாச் செயல்களிலும் பேச்சுக்களிலும் பாட்டுக்களிலும் பிரகாசிப்பதைக் காணலாம். மனிதன் தனது தினசரிக் கடமைகளைப் பணிவுடனும் மகிழ்ச்சியுடனும் செய்து கொண்டும், சமுதாயத் தொடர்புகளையும், பேணிக்காத்துக்கொண்டு, அதே சமயம் ஆன்மீகப் பாதையிலும் முன்னேறமுடியும் என்னும் பேருண்மையை அவரது வாழ்க்கை தெளிவாக விளக்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கையில் பெருகிவரும் சாதுக்கள் சன்னியாசிகளால் எமது சமூக வாழ்க்கையில் எமக்கு ஏற்பட்டுள்ள நன்மைகளைப் பற்றி ஆராய வேண்டிய காலம் வந்துவிட்டது. குடும்ப வாழ்க்கையின் வரம்புகளைக் கடந்து நின்று குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் நாட்டுக்கும் ஆத்மீக முன்னேற்றத்துக்கான சுலபமான வழிகளை அமைக்க முயல்வது எளிய காரியமன்று. உலகைத் துறந்து ஒதுக்குப் புறமான ஆசிரமங்களிலும் மலைக்குகைகளிலும் தனிமையாக வாழ்ந்து வருபவர்கள் உள்ளனர். அவர்களது தனிப்பட்ட மகிமை பொதுமக்களின் கலாசார மட்டத்தைக் குறிப்பிடத்தக்க அளவு உயர்த்த உதவவில்லை; பொதுமக்களின் வாழ்க்கைத் தரமும் அதனால் உயரவில்லை; அவர்களது ஆசியால் நாட்டின் பல பாகங்களிலும் ஆசிரமங்கள் நிறுவப்படுகின்றன. அங்கு அமைக்கப்படும் கோயிற் கோபுரங்கள் வானளாவி நிற்கின்றன. பகட்டான வழிபாட்டு முறைகளாலும் காலை மாலை பாடப்படும் தோத்திரங்களாலும் கவரப்பட்டு அண்மையிலும் தொலைவிலும் வாழும் பலர் இப்பணிகளுக்காக மேலும் மேலும் பணத்தைச் செலவழிக்கின்றனர்.

பிரசாதங்களின் இலவச வினியோகம் சுற்றிலுமுள்ளவர்களை அங்கு ஈக்கள் போல மொய்க்கச் செய்கிறது. ஆனால் இவ்வளவு உழைப்பும் பணமும் செலவழித்து நடத்தப்படும் இந்நிறுவனங்களின் செல்வாக்கு சமுதாயத்துக்கு எந்த அளவுக்கு உதவியுள்ளது? கல்வியறிவும் எழுத்து வாசனையும் பரப்புவதன் மூலமோ, தெய்வீக வாழ்க்கையில் இன்னும் அதிக ஆர்வத்தை ஏற்படுத்துவதன் மூலமோ எமது சமுதாய வாழ்க்கையை மேலும் ஆரோக்கியமுள்ளதாகவும் பிரகாசமுள்ளதாகவும் ஆக்க அது உதவவில்லை.

எமது சமுதாயம் பொறாமை, போட்டி மனப்பான்மை, அற்ப விஷயங்களுக்காகப் பூசல் போன்றவற்றால் வலுவிழந்துள்ளது. சமூகப் பொறுப்பும் சேவை மனப்பான்மையும் கொண்டவர்களாய் உறுதியான உள்ளத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையோருக்குத் திறமையுடன் உண்மையான சமூகப் பணி புரிய வாய்ப்புக் கிடைப்பதில்லை. பழங்கால சாதிப் பிரிவினையில் ஊறிய உளுத்துப்போன சமுதாயக் கொள்கைகள் அவர்களது முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாயுள்ளன.

உடல் உள்ளம் இரண்டின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பதாய், வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் இறைவனின் பேரருள் செயல்படுவதை உணருவதன் மூலம் மனிதனைப் பலவானாயும் உறுதிபடைத்தவனாயும் ஆக்குவதும், குறுகிய தன்னல உணர்ச்சிகளைச் சாதி சமய இன வேற்றுமைகளைக் கடந்த தன்னலமற்ற சேவா உணர்ச்சியாகவும் தியாக உணர்ச்சியாகவும் மாற்றுவதும், எமது பண்பாட்டின் இயல்பு. அப்பண்பாடு எமது நாட்டை விட்டு வேகமாக மறைந்து வருகிறது. அத்தகைய பண்பாட்டுக்கான வாய்ப்பும் களமும் படிப்படியாக எம்மிடம் குன்றிவருகின்றன என்பதிலும் ஐயமில்லை.

இத்தகைய நிலைக்குக் காரணம் என்ன என்று நாம் ஆராயவேண்டியது அவசியம். காலத்தால் நலிந்த சமயக் கொள்கைகளாலும் தப்பெண்ணங்களாலும் ஆன குறுகிய எல்லைக்குள் நாம் உழன்று வருகிறோம். பழங்காலக் கொள்கைகளும் லட்சியங்களும், தற்காலக் கொள்கைகளும் லட்சியங்களும் நேருக்கு நேர்மோதி எமது சமூக வாழ்விலும் சமய வாழ்விலும் குழப்பமான ஒரு தேக்க நிலையை ஏற்படுத்தியுள்ளன. முக்கியமான முடிவெடுக்க வேண்டிய இக்கால கட்டத்தில் அன்னை அவதரித்துள்ளார்.

எல்லாச் சமயங்களுக்கும் எல்லாச் சமுதாய நிறுவனங்களுக்கும் சட்டங்களுக்கும் எல்லாவிதமான கல்விகளுக்கும் அன்னை சமமான மதிப்பும் மரியாதையும் அளிக்கிறார். இவரது மனப்பான்மை உலகிலுள்ள அனைத்தும் பரம்பொருளின் அம்சமே என்னும் பேருண்மையை விளக்குகிறது. "நதிகளெல்லாம் சமுத்திரத்திலே கலப்பது போல எல்லா சமயக்கருத்துக்களும் ஒரே லட்சியத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கிச் செல்கின்றன. நாம் அனைவரும் ஒன்றே'' என்று அவர் கூறுகிறார். ''நீங்கள் என்ன சாதி? உங்கள் சொந்த ஊர் எது?'' என்று யாராவது கேட்டால் அன்னை உடனே ஒரு சிரிப்புடன் பதில் கூறுகிறார்: ''உங்கள் உலக நோக்கில் இவ்வுடல் கிழக்கு வங்காலத்தைச் சேர்ந்தது; பிராமண குலத்தில் உதித்தது. ஆனால் இந்தச் செயற்கை வேற்றுமைகளைத் தவிர்த்துப் பார்த்தால், இவ்வுடல் ஒரே மனித சமுதாயத்தின் ஓர் அம்சம் என்பதைப் புரிந்து கொள்வீர்கள்.''

(தமிழாக்கம்: திரு. அ. சுப்பிரமணிய ஐயர் அவர்கள்)

---

தான் கண்ட இன்பம் வையம் எல்லாம் அடைய வேண்டும் என்ற கருணை மிகுந்தவர்கள் சித்தர்கள். தாங்கள் சித்திபெற்று ஜீவன்முக்த நிலையை அடைந்தவர்களாயிருந்தாலும் உலகத்தின் நன்மையைக் கருதி உலகமக்களுக்கெல்லாம் ஈசன் அருள் இடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தங்கள் அனுபவத்தில் கண்டவற்றை எளிய நடையில் பாடல்களாக அருளி இருக்கிறார்கள் சித்தர்கள்.

—சதாசிவப் பிரமேந்திரர்

★ ★

## குங்குமம் செய்யும் முறை

2 றுத்தல் மஞ்சளை எடுத்து சிறு சிறு துண்டுகளாக உடைத்துக்கொள்க. வெங்காரம், படிகாரம் இரண்டும் சேர்த்து ஒரு றுத்தல் அளவு கலக்குக. இவற்றை 25 எலுமிச்சம் பழச்சாற்றில் ஊற வைக்குக. நன்குஊறிய பின் ஒரு நாளின் பின் உலர வைக்குக. அதன்பின் அரைப்போத்தல் பசுநெய்யோ அன்றி அரைப்போத்தல் நல்லெண்ணெயோ கலந்து இடித்து அரைக்கவும். இதுவே மஞ்சள் குங்குமம் என்றும் அர்ச்சனைக் குங்குமம் என்றும் சொல்லப்படும்.

—காஞ்சிப் புதுப்பெரியவாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ வழிவகுத்த அருணகிரி வள்ளல்

திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம்பிள்ளை, B. A., B. T.

ஞானபூமி எனப் பேசப்படும் பாரத நாட்டில் தோன்றி ஆண்டவனருளைத் தாம் பெற்றது போல இவ்வையகத்தாரும் பெற வேண்டும் என்னும் நோக்கால் நாம் நல்வாழ்வு வாழ வழி வகுத்த வள்ளல்களில் கருணைமிக்க அருணகிரி தலை சிறந்தவராவர்.

அம்புவிதனக்குள் வளர் செந்தமிழால் கந்தன் திருப்புகழ் வளர்த்த சந்தக்குயில், அந்தாதியில்லா இறைவனுக்கு *அந்தாதி* இனிது உரைத்த அண்ணல், சலங்காணும் எமன் சண்டைக்கு அஞ்சாது செய்யும் கந்தர் *அலங்காரம்* தந்த அற்புதகவி, திருமுருகன் சிறப்பினைத்தும் வகுத்துரைக்கும் *திருவகுப்பு* அருளிய தெய்வ நாவலர், கந்தர் அருள் பெற்றுக் *கந்தர் அநுபூதி* கொஞ்சு மொழிக் கிஞ்சுகம் (கிளி) என்றெல்லாம் போற்றப்படும் புனித முனிவரும் அருணகிரி நாத சுவாமிகளே.

இவர் சுமார் ஐந்நூறு ஆண்டுகட்கு முன் திருவண்ணா மலையில் அவதரித்தார். வினைஓடவிடும் வேலவனைக் காண பெரிதும் விழைந்து உருகினர். வேண்டியதளிக்கும் வேலவனும் திருவுருக் காட்சி நல்கினர். ''அறிவை அறிதத்துவமும் அபரிமித வித்தைகளும் அறியென இமைப் பொழுதில்'' அறிவித்தார். பாடும்பணி அவருக்குக் கூடும் பொருட்டு ''முத்தைத்தரு பத்தித் திரு நகை'' என்று அடியெடுத்து உதவினர். அருணகிரியும் அவரருளால் சந்தப்பாவைப்பாடி முடித்தனர். இவருக்கு குமர குருபரன் செபமாலை தந்தும் ஆவியை விளக்கி அநுபூதி அடைவிக்க நயன தீட்சை முதலியன செய்தும் ''சும்மா இரு சொல்லற'' என்று உபதேசித்தும் மோன நிட்டையில் இருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிட்டையிலிருந்த நேரம் தவிர மற்ற சமயங்களில் திரு முருகன் எழுந்தருளியுள்ள தலங்கள் தோறும் சென்று பாடிக் கசிந்து சித்ரகவித்துவ சத்தமிகுந்த திருப்புகழைப் பூர்வ பச்சிம தட்சிண உத்தர திக்குள பக்தர்கள் அற்புதம் அற்புதம் என ஓதி உய்யுமாறு பரவச் செய்தனர். வயலூர், விராலிமலை, செந்தில், பழனி, தணிகை முதலிய திருத் தலங்களில் நம் நாவலருக்கு ஷண்முக நாதனது விசேட தரிசனமும் கிடைத்தது.

பின்னொரு சமையம் திருப்புகழ் முனிவர், கற்றுவல்ல வில்லிபுத்தூர்க் கவிஞருடன் வாதிட்டு கர்ணதானமும் அவருக்குச் செய்தனர். அதுபோலவே திருவண்ணுமலையிலும் சக்தி பக்தனுன சம்பந்தாண்டான் என்பவனுடன் ஏற்பட்ட வாதத்தில் "அதலசேடனூராட" என்ற அற்புதத் திருப் புகழ் பாடி பிரபுடதேவ மகாராஜன் உள்ளிட்ட அன்பர்கள் அனைவரும் தரிசிக்குமாறு கந்தவேளைக் கம்பத்திளையனுராகக் காட்சி வழங்கச் செய்தார். பிரபுடதேவன் வேண்டுகோளின் படி கிளியுருவில் பொன்னுலகம் புகுந்து பாரிசாத மலர் கொணர்ந்து கந்தர் அநுபூதி, கந்தரலங்காரம், திருவகுப்பு முதலியன அருளிச் செய்து துகளில் சாயுச்சிய கதியை பெற்றனர்.

ஞானிகள் விவகாரம் உலக உபகாரம் என்பர். ஒவ்வொரு கவிஞருடைய பாடல்களும் அவர் வாழ்ந்த கால நிலையைக் காட்டும் கண்ணுடிகளாகும். பரம ஞானியாகிய அருணகிரியார் வாழ்ந்த காலத்தின் நிலையும் அவர் காட்டிய கருணைத் திறமும் அவரது தோத்திரப் பாக்களில் நிழலிடக் காணலாம். அக்காலத்தில் செந்தமிழ் புலவர்கள் செல்வந்தர்கள் மேல் கோவை உலா, மடல் கூறிப் பொருள் கூட்டிக் கொணர்ந்து பரத்தையர்களுக்கிந்து பாழாவது கண்டு நம் திருப்புகழ் நாவலர் சிந்தை நொந்தார். ஆயினும் அவர்கள் மனம் புண்ணுகாமல் சீர்திருத்தத் திருவுளம் பற்றினுர். இல்லாத குறைகளையெல்லாம் தமதாக ஏற்றுக்கொண்டு அவற்றை நீக்குமாறு இலேவேல் இறைவனை இறைஞ்சினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது அதி அற்புத தெய்வஞானத் திருப்புகழால் மக்கள் இகபர நலங்கள் எல்லாம் பெற்று இனிது வாழ வழி வகுத்தார். கருணைக்கு அருணகிரியென்பர் அல்லவா? அவரது பரந்த மனப்பான்மையை "பலகாலும் உனைத்தொழுவோர்கள் மறவாது திருப்புகழ் கூறிப் படி மீது துதித்துடன் வாழ அருள்வேனே" என்று எல்லோர்க்குமாக இறைவனை வேண்டுவதிலிருந்து அறியலாம்.

## வாழ்வுக்கு வழி வகுக்கும் அருட்பாடல்கள்

1. வாருமே பெருத்த பாருளீர்: வாழலாம்.
அறஞ்செலுத்தி ஆளலாம். மயிலையும்
அவன்திருக்கை அயிலையும் அவன் கடைக்கண்
இயலையும் நினைத்திருக்க வாருமே.

2. கார்மயில் வாகனனைச் சாந்துணைப்போதும்
மறவாதவர்க்கு ஒரு தாழ்வில்லையே.

3. காலையிலெழுந்துன் நாமமே மொழிந்து
காதலுமைமைந்த என ஓது.

4. சகல துர்க்குணமற சகலசற்குணம் வரத்
தரணியில் புகழ் பெறத் தகைமை பெற்
றுனது பொற் சரணம் முப்பொழுதும் எப்
பொழுதும் நட்பொடு நினைத்திட அருள் தருவாயே.

5. வையிற் கதிர்வடிவேலோனை வாழ்த்தி
வறிஞர்க் கென்றும் நொய்யில் பிளவள
வேனும் பகிர்மின்கள்.

6. அரசாகி வாழினும் வறுமை கூறினும் இறை
வன் வார்கழல் ஒழிய மொழியன் மின்

7. சூரிற்கிரியில் கதிர் வேலெறிந்தவன்
தொண்டர் குழாம் சாரில் கதியன்றி
வேறில்லை காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மை நலங்களைப் பெறச் செய்யும் இனிய பாடல்கள்

திருமணம் பெற: "விறல்மாறனைந்து" (செந்தூர்)
மகப்பேறு உண்டாக: "செகமாயையுற்ற" (ஏரகம்)
அங்கஹீனம் அகல: "திமிரஉத்தி" (பழநி)
நோய் நீங்க: "இருமலுரோக" (தணிகை)
இடர் ஒழிய: "அதிருங்கழல்" (குன்றுதோருடல்)
எமபயம் நீங்க: உனைத்தினந்" (பரங்கிரி)
பேரும் புகழும் பெற: "ஐங்கரனை ஒத்த" (கொங்கணகிரி)
சிவயோக சாதனைக்கு: "மதியால் வித்தகனுகி" (கருவூர்)
இம்மை மறுமை நலம் பெற: "வசனமிக வேற்றி" (பழநி)
நவக்கிரக சாந்திக்கு: "சேயவன் புந்தி" (கந்தரந்தாதி)
பெரு வாழ்வும் பரகதியும் பெற: "சரணகமலாலயத்தை" (ஏரகம்)
குருவருள் பெற: "உருவாய் அருவாய்" (அநுபூதி)
இன்னும் பலவுள. விரிவஞ்சி விடுத்தனன்.

மேற்போந்த அருட் பாடல்களைப் பக்தி பிறங்கப் பாராயணம்செய்பவர்கள் வள்ளி மணவாளன் வழங்கு பேரருளால் எண்ணியாங்கு எய்தப் பெறுவர்.

வேலும் மயிலுந் துணை

---

துர்க்கா தேவியே! உன்னைத் தியானித்தாலே எல்லா ஜீவ ராசிகளுடையவும் பயத்தை நீக்குகிறுய்! நல்ல நிலைமையில் இருப்பவர்கள் உன்னை நினைத்தால் மிகுந்த சுபமான புத்தியை அளிக்கிறுய். தரித்திரம், பயம், துக்கம் இவைகளைப் போக்கக் கூடியவர் உன்னைத்தவிர வேறு யார் உளர்? எல்லா மக்களுக்கும் உபகாரம் செய்வதற்காகவே கருணை மிகுந்த இளகிய மனதுள்ளவளாய் இருக்கிறுய்.

—ஸப்த சுலோகி மகாமந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டை நாட்டுத் தவமுனிவன் திருவலம் ஸ்ரீலஸ்ரீ சிவானந்த மௌன சுவாமிகள்

(வேலூர் அன்பர் திரு. ஜி. கிருஷ்ணன்)

**உலகமும் நாங்களும் கண்ட அதிசயம்.** குடியாத்தம் தாலுக்கா கார்ணும்பட்டு என்ற கிராமத்தில் சலவைத் தொழில் புரியும் வம்சத்தில் அசைவ குடும்பத்தில் அவதரித்தவர். ஓர் துறவி. அவரைச் சார்ந்தவர்கள் எங்களுக்கு தெரிந்தவரையில் பல்லாயிரம்பேர் இருக்கின்றார்கள். அவர் எல்லா மதங்களையும் சமமாகப் பாவித்துவருகிறார். ஆனால் துறவறம் வந்தநாள் முதலாக காக்கையின் அடை காத்து பொரித்த குயில் குஞ்சு போல ஆகிவிட்டார் முனிவர். அவர் குடும்பத்தில் இருக்கும் போது எத்தனையோ பழக்க வழக்கங்கள் இருந்திருக்கலாம். நாய் உண்ணாத உணவுகளையும் உண்டு இருக்கலாம். அவர் குடும்பத்தை விட்டு வெளியேறியதும் அப்பா! சொல்லவோ வாய் கூசுகிறது. சைவ கட்டுப்பாட்டில் ஏட்டில் பார்க்கிறோம். ஜீவகாருண்யத்தை ஏட்டில் பார்க்கிறோம். இப்போது நேரில் பார்க்க வேண்டுமென்றால் அந்த கட்டுப்பாட்டை இமயம் முதல் குமரிவரையில் நான் சுற்றிப் பார்த்து வந்த வகையில் திருவலத்தில்தான் நடந்தேறிவருகிறது. ஆ! அப்பேர்ப்பட்ட ஜீவகாருண்ய நற்சொற்களை கேட்க தக்கது. திருவலம் சந்தையில். அசைவ உணவு விற்பனை செய்கிறார்கள் என்று கேள்விப்பட்டு அந்த சந்தையை சாமிகளே ஏலம் எடுத்து சுங்கம் வசூலிக்காமல் என் சந்தையில் விற்பனைசெய்யக்கூடாது என்றுதிட்டம்விடுத்தார்.

திருவலம் கிராமத்தவரை அழைத்து 14 வருடம் பேசாத மகான் வாய்திறந்து பேசி பல்லாயிரம் மக்களை சைவம் ஆக்கினார். திருவலத்திலிருந்த கசாப்புக் கடைகள் எல்லாம் எந்த மூலை போய் விட்டதோ தெரியவில்லை. அவர் பிறந்த ஊரில் பலி நீக்க வேண்டும் என்று கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த கிராமவாசிகள் நீங்கள் தங்கியிருந்த செல்லியம்மன் கோயில் ஆலயத்திற்கு ரோடு அமைத்துக் கொடுத்தால் நாங்கள் அறவே பலியை ஒழித்துவிடுகிறேம் என்று சொன்ஞர்கள். அதன்படி ரூபாய் 10,000 - செலவில் ரோடு அமைத்துத் தந்தார். இப்படி எத்தனை ஊர்களுக்குச் சென்று ஆங்காங்கு போதனைகள் சொல்லியும், திருப்பணிகள் செய்தும் சைவ கட்டுப்பாடுகளை எடுத்துச் சொல்லி பல்லாயிர குடும்பங்கள் பல ஆயிரம் ஊர்கள் சைவம் ஆகிவருகிறது. இது உலகம் அறிந்த விஷயம். முனிவர் காவி உடுப்பதில்லை, சடையை வளர்ப்பதில்லை, லாகிரி வஸ்துகளை உபயோகிக்கமாட்டார். பால், தயிர், நெய், தேன், பெருங்காயம் இன்னும் சுவையான பண்டங்கள் உபயோகிக்கமாட்டார். எளிய உணவு குப்பையில் இருக்கும் கோணிக் கந்தையை அணிந்து கொண்டிருப்பார். ஸ்நான , பானங்களை விட்டவர், ஆடம்பரம் இல்லாதவர், தனக்காக வேண்டாதவர், தன்னலம ற்ற வ ர், இல்லற பாசத்தை அறவே ஒழித்தவர், பந்தபாசத்தை அறவேஒழித்தவர். உலக மக்களை தாவிப்பிடிக்கிறுர் ஏன்?

சைவ கட்டுப்பாட்டுக்காக சன்மார்க்க நிலைக்கு வாருங்கள் என்று ஞான மொழிகளையும், தத்துவ மொழிகளையும், மெய்ஞ்ஞானங்களை வாரி வழங்குகிறுர். அஞ்ஞானத்தை சொல்லி மெய்ஞ்ஞானத்தைவிளக்குகிறுர். மெய்ஞ்ஞானத்தை சொல்லி அஞ்ஞானத்தை விலக்குகிறுர். அவரிடம் பேச வேண்டும் என்றுல் எத்தனை நாள் உட்கார்ந்திருந்தாலும் அந்த ஞான மொழிகளை கேட்க நாள் போவது தெரியாது. ஆ! இப்பேர்பட்ட முனிவரை நாங்கள் ஏட்டில் தான் பார்த்திருக்கிறேம். இன்றுதான் நேரில் பார்க்கிறேம்.

பகல் 12 மணிக்கு கூழ் உணவு ஏழைகளுக்கு கொடுக்க ரூபாய் 1,79,083-00 சூரிய, சந்திரன் உள்ளவரை தான் எரியவிட்ட கூழ் அடுப்பு அவியக் கூடாது என்றும், திருவலம் வில்வநாதீஸ்வரருக்கு 108 விளக்கு அவியக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் 20 வித கட்டளைகள் நடக்க வேண்டும் என்றும், ஐகோர்ட் அபீஷயல் டிரஷ்டில் நிதி வைத்துள்ளார். அதன் விபரம் கைலாய கோபுரம் அடியிலும், சுவாமிகள் தங்கியிருக்கும் ராஜேஸ்வரி ஆலயத்திலும் ரிக்கார்டுமூலம் பார்க்கலாம். விஸ்வநாதீஸ்வரர் ஆலயம் பாண்டிய, பல்லவ காலத்திலேயே கட்டி முடிவு பெருத சுற்று மதில் களையும், இன்னும் பல வேலைப்பாடுகளையும் பல லட்சம் செலவில் 48 நாள் கும்பாபிஷேகமும் முடித்தார். இன்னும் 96 நாள் மண்டல அபிஷேகம் செய்தார். இந்த கும்பாபிஷேகத்தில் தினம் 10 மூட்டை அரிசி அன்னதானம் வழங்கினுர். இது உலகமறிந்த விஷயம். சுருக்கிக் கொண்டோம். அவரது திருப்பணிகளையும், பொதுத் தொண்டுகளையும் ஏட்டில் எழுத அடங்காது. எத்தனை பேர் எத்தனையோ கோவில்கள் திருப்பணி இன்றும் நடந்து வருகிறது. இது விஷயமாக பேப்பரிலும், கல்கி இதழிலும், சிவகங்கையிலும் இன்னும் பலவித பத்திரிகைகளில் பார்த்து வருகிறோம்.

**தேர்கள் செய்த விபரம்:**

சென்னை கந்த கோட்டத்துக்குச் சென்றல், கந்த கோட்டத்திற்கு ஒரு வெள்ளி ரதம் செய்து தருவதாகவும் அப்போது சென்னை மக்கள் சுவாமிகளை தங்கள் வீட்டில் சாப்பிட வேண்டும் என்று பலபேர் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு சுவாமிகளுக்கு ஒரு யோசனை வந்துவிட்டது. உன் வீட்டில் வந்து சாப்பிட்டால் ரூபா 100–ம் ஒரு வெள்ளித் தட்டும், ஒரு வெள்ளி டம்ளரும் தர முடியுமா என்று வினவினுர். அதற்கு நூற்றுக்கணக்கில் கியூவில் நின்று விட்டார்கள். 22 நாட்களில் ரூபா 2½ லட்சம் குவிந்து விட்டது. 21 அடி உயரமுள்ள வெள்ளி ரதத்தை செய்து முடித்தார். மீதி 12,000–00 ரூபாயை ஐகோர்ட் அபீஷியல் டிரஸ்ட்டில் வைத்து அதில் வரும் வட்டியை விழாவின் போது ஏழைகளுக்கு அன்னதானம் செய்ய ஏற்பாடு செய்துள்ளார். இதைப்பார்த்து திருத்தணி தேவஸ்தானத்தவர் எங்களுக்கும் ஒரு வெள்ளி ரதம் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அதன்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கும் ஒரு வெள்ளி ரதம் செய்து தந்தார். அதில் மீதி நாலாயிரம் சில்லறையை ஷெ ஐகோர்ட்டில் வைத்துள்ளார். விழாவின் போது ஏழைகளுக்கு அன்னதானம் செய்வதற்காக.

இதைப் பார்த்த கோவை மாவட்ட பொள்ளாச்சி தொழிலதிபர் திரு. என். மகாலிங்கம் அவர்கள் தான் பிறந்த ஊருக்கு அழைத்துச் சென்று சுவாமிகளுக்கு ரூபா 1 லட்சம் குரு காணிக்கை கொடுத்தார். அங்கு 2½ லட்சம் பக்தர்களிடமிருந்து வசூலித்து ரூபா 3½ லட்சத்தில் ஒரு வெள்ளி ரதம் செய்தார். மிகுதி ரூபாய் நாற்பதாயிரம் பணத்தை நாச்சிமுத்து தர்ம ஸ்தாபனத்து விழாவின் போது ஏழைகளுக்கு அன்னதானம் செய்ய வைத்துள்ளார். அந்த மாரியம்மன் ஆலயத்தில் சுவாமிகள் பலியை அறவே ஒழித்து விட்டார். சுவாமிகளுக்கும், திரு. மகாலிங்கத்திற்கும் இருக்கும் ஒரு தொடர்பை எழுதவேண்டுமென்றால் ஏட்டில் அடங்காது. சுருக்கமாக சொல்லியிருக்கிறேன். இதோடு திருப்பதி தேவஸ்தானம் சித்தூர் பதியம்பாடி திரு. சின்னப்பா செட்டியார், M. L. A. அவர்கள் மூலமாக திருப்பதி தேவஸ்தானத்திற்கு ஒரு வெள்ளி ரதம் செய்து தரவேண்டும் என்று சுவாமிகளை அடிபணிந்து கேட்க ரூபா 5 லட்சம் தேவஸ்தான பணத்தைக்கொடுத்தார்கள். அதில் வெள்ளி ரதத்தை 37 அடி செய்து கொடுத்து மிகுதி பணம் ரூபா 2½ லட்சம் ஓர் குச்சியால் தள்ளி விட்டார். சுவாமிகள் பணத்தை கையில் தொடுவதில்லை. இந்த அஞசார பணம் எனக்கு சேர வேண்டுமா? நான் என்ன காண்ட்ராக்ட்காரனா? கூலிக்காரனா? சிரித்துக் கொண்டு ஒரு தென்னங் குச்சியால் தள்ளி விட்டார். இந்தப் பணம் சுவாமிக்குத்தான் சேர வேண்டுமென்று ஒரு நாளெல்லாம் உட்கார்ந்திருந்து தர்க்கம் செய்தார்கள். அதற்கு சுவாமிகள் தீக்குச்சியை வைத்து விடுவேன் என்று சொன்ன பிறகு தேவஸ்தானத்தார் எடுத்துக் கொண்டார்கள். இப்பேர்ப்பட்டயோகீஸ்வரரை நாங்கள் என்ன செய்வது என்று திருப்பதியிலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்து பரிவாரங்களுடன் திருவலம் விஸ்வநாதீஸ்வர ருக்கு ரூபா 1000ல் அபிஷேகம் செய்தும் வெள்ளி ரதத்தை சுமார் 12 லாரிகளில் ஏற்றிக்கொண்டு சுவாமிகளை தங்க குடைபோட்டு பரிவாரங்களுடன் திருமலைக்கு அழைத்துப் போனார்கள். ஜீயர் என்ன சொல்கிறார்? பெருமாளே அவதாரம் செய்து வந்து அவர் பணி அவர் செய்து கொள்கிறார் என்று அவரை மனிதராக கருதவில்லை. பெருமாளாக கருதுகிறார்.

மீண்டும் கோவிந்தராஜ பெருமாளுக்கு ஒரு மர ரதம் செய்துதர வேண்டும் என்று ரூபா 3 லட்சம் வழங்கினார்கள். சுவாமிகள் சிக்கன செலவில் 40 அடி உயரம் உள்ள ரதத்தை திருவலத்தில் செய்துள்ளார். மீதியுள்ள 1¼ லட்சம் வாபஸ் செய்து விட்டார். யார் வாபஸ் கொடுப்பார்? இதை திருவலத்தில்தான் பார்க்கலாம். தற்போது ரத்னகிரி கல்படிகளை முதல் முதலாக பல ஆயிரக்கணக்கில் முடித்து அங்கு பத்திரிகையில் வெளியீடு செய்தபடி ரிகார்டில் எழுதிவைத்தபடி திருப்பணிகள் நடந்து வருகிறது. சுவாமிகளிடத்தில் கீழ்மின்னல் கிராமவாசிகள் 3 வருடகாலம் நடந்த பலன் இன்னும் மேலோங்கி வருகிறது. சுவாமிகள் கால்பட்ட இடமெல்லாம் கைலாயம் ஆகிறது. சைவ கட்டுப்பாட்டுத் திட்டங்களை நேரில் தெரிந்துகொள்ளவும், சந்தானம் இல்லாதவர்களுக்கு சுவாமிகள் விபூதி, வில்வம் கொடுத்து பல்லாயிர மக்களுக்கு சந்ததிகள் உண்டாகிறது. சுவாமிகள் திருவலத்தில் ஏற்படுத்திய ஜீவ காருண்ய சங்கத்தைப் பார்க்கத் தக்கது. சுவாமிகள் எல்லாத் திருப்பணிகளிலும், வேலைக்காரர்களுடன் எல்லா வேலைகளையும் சுவாமிகளும் செய்வார். சம்மட்டி அடிப்பார், கட்டப்பாரை போடுவார், சிமெண்ட் கலப்பார், சிற்பங்களுக்கு வர்ணங்கள் தீட்டுவார், அவர் செய்யாத வேலை எதுவும் இருக்காது. உழைப்பில் உயர்ந்தவர், தவத்தில் மிகுந்தவர், சித்தர், பல லட்ச வியாதிகளை தீர்த்தவர். விபூதி கொடுப்பார் தனி நபருக்கு விபூதி கொடுப்பதில்லை. அதுவும் அம்மாவாசை 1ம் நாள்தான் கொடுப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள் அருளியவை

(நா. முத்தையா)

உலக இந்து மகாநாட்டின் போது சுவாமிகள் கடவுள் வழிபாட்டுக்கு அடுத்தபடியாக வற்புறுத்திய முக்கிய விடயம் வரதட்சணைக் கொடுமையாகும். பேச்சளவில் நில்லாது அதனைச் செயலிலும் காட்ட முன்வந்துள்ளார்கள். மகாநாட்டின்போது இரண்டு கரும்பலகைகளில் இரண்டு விளம்பரங்களைப் பார்க்க நேர்ந்தது. அவற்றை அங்கு கண்டவாறே கீழே தருகின்றேன்.

## கூட்டுக் கலியாணம்

*"வரதட்சிணை இல்லாமலும் ஆடம்பரச் செலவு இல்லாமலும் தார்மீக முறைப்படி கலியாணம் செய்ய விரும்புபவர்களுக்கு ஒரே இடத்தில் அவரவர் சம்பிரதாயங்களை அநுசரித்து கூட்டாக ஒரே மேடையில் கலியாணங்கள் நடாத்தத் திட்டம் இடப்பட்டுள்ளன. இந்தக் கலியாணத்தில் மாங்கலியம், கூறைப் புடவை, வேஷ்டி முதலிய அத்தியாவசியப் பொருட்கள் எல்லாம் இலவசமாக அளிக்கப்படும்.*

**காரியதரிசி, பிராமண இளைஞர் சங்கம்,**
*41, நாயக்கர், புதுத்தெரு, மதுரை - என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்க.*

## அடுத்த விளம்பரம்

*ஆடம்பர வாழ்க்கையை அகற்றுங்கள். திருமணக் காலங்களில் ஆடம்பரச் செலவுகளை நிறுத்துங்கள். வைதீகச் செலவுகளைக் குறைக்காதீர்கள். திருமணங்களில் வைதீகச் சடங்கில்லாத, மாப்பிள்ளை அழைப்பு போன்றவைகளில் பணத்தை ஏராளமாகச் செலவு செய்யாதீர்கள்,*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது சமூகத்தில் ஆடம்பரமாகவும் அதிக செல விலும் திருமணம் நடத்துபவர்களை அனுவசியமாகப் புகழாதீர்கள். 'அவர்கள், மத்தியதரத்தார் கெட்டுப் போக வழிவகுப்பவர்கள் என்று கூறுங்கள்.' உங்கள்மத சின்னங்களை அணிய வெட்கப்படாதீர்கள். இந்த விஷயத்தில் நம் நாட்டிற்குப் புதிதாக வந்த மதத்தினரைப் பார்த்தாவது திருந்துங்கள்.

இந்த வரதட்சணை நமது தேசத்தில் பலவித உருவத்தில் சமூகத்தினிடையே புகுந்துள்ளது. நன்கொடை நல்லவீடு, மோட்டார், மேல்நாட்டுப்படிப்பு மாப்பிள்ளையின் தாய் தந்தையருக்கு நன்கொடை, மாப்பிள்ளையின் சகோதரிகளுக்கு நன்கொடை, மாப்பிள்ளையின் சகோதரிகளுக்கு மாப்பிள்ளை தேடுதல், வீட்டுக்கு வேண்டிய தட்டு முட்டுச் சாமான்கள், இப்படி எத்தனையோ?

ஒருமாப்பிள்ளைக்குப் பெண் பிடித்துவிட்டால் விவாகம் சமயாசார முறைப்படி நடத்தி வைக்க வேண்டியது. பெண்வீட்டார் தமது பெண்ணுக்கு எதை விரும்பிக் கொடுக்கிறார்களோ அதனை ஏற்றுக் கொள்ளவேண்டியது. ஏலம்போடுவது போல மாப்பிள்ளையை விலை பேசக் கூடாது.

இளைஞர் சமுதாயத்தில் ஒரு விழிப்புணர்ச்சிஏற்பட்டுள்ளது. தமது தாய்தந்தையர் சீதனம் பேசினாலும் அவர்கள் அதற்குச் சம்மதிக்கக் கூடாது. அதுபோல பெண்களும் மாப்பிள்ளையை விலைகொடுத்து வாங்கும் வழக்கத்தை எதிர்க்கவேண்டும். சீதனம் பேசிவரும் மாப்பிள்ளையைத் திருமணம் செய்வதில்லை என்ற வைராக்கியத்தை அவர்களும் கடைப்பிடிக்க வேண்டும்.

வசதிபடைத்த குடும்பங்களில் திருமணம் நடைபெறும் போது தமக்குப் பக்கத்தில் உள்ள குடும்பங்களில் வசதியற்றிருக்கும் யுவர்கள் யுவதிகளுக்கு அதேமணப்பந்தலில் கூட்டுக் கலியாணமாக நடத்தி வைக்கலாம். இதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கும் ஆசி மிக உன்னதமானது. வீட்டு மூலைக்குள் இருந்து பெருமூச்செறிந்த ஆண் பெண்களுக்கு வாழ்வுக்கு வழி காட்டும் போது அவர்களுடைய உள்ள மலர்ச்சியிலிருந்து எழும் ஆசியே உலகத்தில் என்றும் வாழ வைக்கும், ஆசியாகும். இதனை நம் நாட்டில் நாம் அனுட்டானத்திற்குக் கொண்டுவரவேண்டும். இதுதான் உண்மையான ஜனநாயக சோஷலிசமாகும்.

எல்லா நாடுகளிலும் சோஷலிசம் பேசப்படுகின்றது. சட்டரீதியாகச் சோஷலிசத்திற்கு மக்கள் தள்ளப்பட்டிருக்கிறார்களே தவிர மனமுவந்து சோஷலிசவாழ்வை ஏற்றுக் கொண்டவர்கள் மிகக் குறைவு என்றே கூற வேண்டும். மக்கள் மனந்திரும்பினால்தான் நாம் எந்த விஷயத்திலும் பூரண வெற்றியைக் காணமுடியும்.

வரதட்சணைக் கொடுமை நமது சமூகத்தில் புரையோடிக்கிடப்பதனாலேயே ஆசார்யாள் அவர்கள் உலக இந்து மகாநாட்டில் ஒரு தீர்மானமாகக்கொண்டுவந்து உலகம் அறியும்படி வைத்தார்கள். சட்டரீதியாகவேனும் மக்களுடைய மனத்தைத் திருப்ப வேண்டும் என்பது பலருடைய விருப்பமாகும். இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது விழா மண்டபம் அதிரும் வண்ணம் கரகோஷம் நிகழ்ந்தமை இன்றும் காதில் ஒலித்தவண்ணம் இருக்கிறது.

இந்துக்களிடையே சமயப்பற்றை ஊட்டுவதற்குச் சமூக சேவை மிக முக்கியமானதாகும்; எல்லோரும் தங்கள் தங்களால் இயன்றளவு சமூக சேவையில் ஈடுபட வேண்டும். சமூக சேவையில் ஈடுபடுகின்ற அளவுக்கு தன்னலம் குறைந்து பரநலம் வளரும். அகங்காரம் குறைந்து மனதில் இறை சிந்தனை ஏற்படும்.

பெற்றோர்கள் தம் குழந்தைகளுக்கு குறைந்தது ஒரு தெய்விகப் பாடலையாவது கற்பித்து வைக்க வேண்டும். காலை, மாலை, உணவு உண்ணும் வேளைகள், நித்திரைக்குச் செல்லும் நேரம், நித்திரைவிட்டெழும் நேரம் ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பங்களில் அத் தெய்வீகப் பாடலை ஓதும் பழக்கத்தையும் ஏற்படுத்த வேண்டும். குறைந்தது வாரத்தில் ஒரு நாளைக்காவது குழந்தைகள் கோயிலுக்குச் செல்லுமாறு பெற்ருர் தூண்டவேண்டும். தங்கள் குழந்தைகளுடைய நாளாந்த வாழ்க்கையில் சமய வாழ்வை ஏற்படுத்துவதே பெற்ருேர் இந்து சமயத்திற்குச் செய்யும் பெருந்தொண்டாகும்.

இந்து சமயத்தில் உள்ளவர்கள் எல்லா மதங்களுக்கும் மாறிச் சென்றுள்ளார்கள். ஆனுல் மற்றைய மதத்தவர்கள் இந்து மதத்திற்கு மாறிவந்தது கிடையாது. அதற்குக் காரணம் நமது குழந்தைகளுக்கு இளம் வயதிலேயே சமயப் பற்றை உண்டாக்காமையேயாம், சமயப் பற்று இருக்க வேண்டும். சமய வெறிதான் கூடாது. சமயப்பற்று ஆண்டவனிடத்து அழைத்துச் செல்லும். சமய வெறி மனிதனிடத்துள்ள நல்ல குணங்களை எல்லாம் அழித்து விடும்.

சமயப்பற்றினை வளர்ப்பதில் இந்துக்களாகிய நாம் எவ்வாறு பின்தங்கிய நிலையில் இருக்கின்ருேமோ, சமூக சேவையிலும் அவ்வாறு பின்தங்கிவிட்டோம்.
நம்முடைய மதம் மிகத் தூய்மையானது, வேதங்களை அடிப்படையாகக் கொண்டது. அதனுல்தான் நமது மதத்தை வைதிகமதம் என்றும் சனுதன தர்மம் என்றும் அழைத்து வந்தனர். வெளிமயக்கில் உள்ளதைப் பறிகொடுத்து வர்ணுச்சிரம தருமங்களை கைநழுவ விட்டுக்கொண்டே வந்துள்ளோம். இத்தகைய உயர்ந்த கொள்கையுள்ள மதத்தில் வாழ்ந்தும் கடைப்பிடிக்கும் முறையில் குறைகளை விட்டுக்கொண்டே வந்துள்ளோம். இதனுல்தான் எமது வாழ்வுக்கும் சமயத்துக்கும் இடையில் பெரியதொரு இடைவெளி ஏற்பட்டுள்ளது.

மதம் சீரழிந்துவிட்டது என்று குறை கூறுவது மதத்தின் மேல் பழிசுமத்துவதாகும். மதத்திலிருந்து தம்மை வேருக்கிக் கொண்டு இன்றும் பலர் மதத்தை நிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் தங்களைத் தாமே நிந்திக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ளுகின்றார்கள் இல்லை. ஆகாயத்தை நோக்கித் துப்புகிறவன் அத்துப்பல் தன்னை நோக்கி வருவதை அறியாதவன் போல வாழ்க்கை நடத்துகிறார்கள்.

சமய அநுட்டானம் எள்ளளவும் இல்லாத ஒரு சிலர், பிறரைக் குறை கூறுவதனால் பாமர மக்களையும் ஏமாற்றித் தம்மைத் தாமே ஏமாற்றி வருகின்றார்கள். இந்து என்ற சொல்லுக்கே பிறர்படும் துன்பத்தைக் கண்டு மனம் இரங்குபவன் என்பது பொருளாகும். இதன் பொருளை உணர்ந்துவிட்டாலே அவர்கள் எல்லாரும் ஆஸ்திகர்களாகிவிடுவார்கள்.

---

## விபூதி செய்யும் முறை

சுத்தமான இடத்தில் இடும் பசுச்சாணத்தை எடுத்து சிறு சிறு வில்லைகளாகத் தட்டி சூரிய கிரணத்தில் நன்கு காய வைக்கவும். சுத்தமான நிலத்தை தேர்ந்தெடுத்து அதில் 8 படி உமியையோ அன்றி 8 படி பதர் நெல்லையோ பரவுக. அதன்மேல் 100 நன்கு காய்ந்த சாணி வில்லைகளை அடுக்குக. காற்றுப்புகாதவாறு நன்கு மூடி பஸ்பம் செய்யவும். மூன்று நாட்களின் பின் வெள்ளை நிற விபூதியை எடுத்துக்கொள்ளவும். ஓரமாய் இருக்கும் விபூதி கறுப்பாக இருந்தால் அதைத் தள்ளிவிடலாம். பிறகு பனியில் நான்குநாள் வைத்தால்மிகவும் மென்மையாக இருக்கும். இதைச் சுக்கில பட்ச அஷ்டமியிலோ அன்றித் திரியோதசியிலோ செய்ய வேண்டும்.

காஞ்சி புதுப்பெரியவாள்.

---

பெண்களே சமயத்தின் தூண். ஆடவர்கள் மனத்தில் ஏற்படும் தேவையற்ற சந்தேகங்களும், குழப்பங்களும், மதம் பற்றியும், கடவுள் பற்றியும் பெண்களுக்கு ஏற்படுவது இல்லை.

—இராமதாசர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதைகள் கேட்க விருப்பமா?

சின்னஞ்சிறு குழந்தைகளுக்குச் சொல்லி மகிழ்விக்க நல்ல நல்ல கதைகள் இல்லையே என்ற கவலை இனி வேண்டாம். ஏன்? பெரியவர்கள் கூட தத்துவம் நிறைந்த கதைகளைப் படித்து பக்தி உணர்வு பெறுவதற்கு ஏற்ற நூல்தான்.

## தத்துவக் கதைகள்

இதனை எழுதியவர்:

**நா. முத்தையா**

ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டிய நூல்

**விலை ரூபா 3-50**

கிடைக்குமிடம்:

**ஆத்மஜோதி நிலையம் — நாவலப்பிட்டி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered at the G. P. O. as a Newspaper M. L 359/00.

# சந்தா நேயர்களுக்கு!

**அன்புடையீர்!**

இந்தச் சோதியுடன் சோதி 28 ஆண்டுச் சேவையை ஆரம்பித்து 5-6ம் இதழ் வெளிவருகிறது. இன்றைய நிலையில் கடுதாசித் தட்டுப்பாடும் விலை ஏற்றமும் யாவரும் அறிந்ததே. எம்மால் இயன்றளவு ஆத்மீக சேவை செய்வதே எமது குறிக்கோள். ஆகவே சந்தா நேயர்கள் தங்கள் சந்தாக்களை வெகு விரைவில் அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

சந்தா நேயர்கள் ஒவ்வொருவரும் தமது சந்தாவை உரியகாலத்தில் அனுப்பி வைப்பதோடு ஒவ்வொரு புதிய அன்பர்களைச் சேர்த்து உதவினால் ஆத்மீகம் பரவுவதற்கு உதவி செய்தவர்களாவீர்கள்.

## ஆத்மஜோதி நிலையம்,

## நாவலப்பிட்டி (இலங்கை.)

அச்சிடுவிப்போர்:- **ஆத்மஜோதி நிலையம்**
அச்சிடுவோர்:- **ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்.**
வெளியிட்ட திகதி:- 13-4-76.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org